DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Calender | Case No. CC . 111/2012 |
| Miscellaneous | |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution Pw 4 |
| Name | சேவுகன் |
| Father / Husband Name | சொக்கலிங்கம் |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 19th July 2022.

---

முதல் விசாரணை:-

நான் சிவகங்கை காஞ்சிரங்காலில் குடியிருந்து வருகின்றேன். நான் திருவிழாக்களில் வளையல் கடை போட்டு வேலை செய்து வருகின்றேன். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் என் முன்னிலையில் தயார் செய்யவில்லை. பார்வை மகஜரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது அல்ல. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

---

Hostile (அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154 ன் படி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:

கடந்த 06.03.2012 ம் தேதி 14.00 மணிக்கு நானும், மேற்படி ஊரைச் சேர்ந்த பஞ்சவர்ணம் மகன் முனியசாமியும் காஞ்சிரங்காலில் உள்ள மீனா காம்பவுண்ட்

வழியாக சென்று கொண்டிருக்கும் போது சிவகங்கை நகர் காவல் நிலையம் சார்பு ஆய்வாளர் அவர்கள் இவ்வழக்கு பற்றி எடுத்துக் கூறி சம்பவ இடத்தை பார்வையிட்டு எங்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நான் 2 வதாக சாட்சி கையொப்பம் செய்து விட்டு தற்சமயம் எதிரிகளுக்காக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>

இல்லை.

**(ஒம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 19.07.2022**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சுருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
சிவகங்கை.